**பத்திரிக்கைச் செய்தி**

## அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளுக்குட்பட்ட 1098 பயனாளிகளுக்கு ரூ. 97 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.




அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளுக்குட்பட்பட 1098 பயனாளிகளுக்கு ரூ. 97 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.06.2016) நடைபெற்றது.

இவ்விழாக்களில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் உணவு பொருள் வழங்கல் துறையின் சார்பில் 950 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 16 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் தலா ரூ. 3, 670/- மதிப்பிலும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை 33 பயனாளிகளுக்கும், இயற்கை மரணம் உதவித் தொகை 54 பயனாளிகளுக்கும், திருமண உதவித்தொகை 55 பயனாளிகளுக்கும், ஆக மொத்தம் 1098 பயனாளிகளுக்கு ரூ.97 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2011 சட்டமன்ற பொதுத் தேர்தலில் அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி தந்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து 6-வது முறையாக மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றவுடன் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து வேளாண் பெருமக்களின் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார்கள். 100 யூனிட் மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் வீடுகளுக்கு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றி தந்துள்ளார்கள். ஏழை பெண்களின் திருமணத்திற்கு திருமண நிதியுதவியுடன் திருமாங்கலியத்திற்கு 4 கிராம் தங்கத்தை 8 கிராம் ஆக உயர்த்தியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசு நிர்வாகம் கிராமங்கள் தோறும் மக்களிடையே நேரில் சென்று முகாம்கள் நடத்தி பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் புதன் கிழமைதோறும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு மனுக்கள் முகாம்களும், வெள்ளிக்கிழமை தோறும் அம்மா திட்ட சிறப்பு முகாம்கள் மூலமும் மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக தீர்வு காணப்பட்டு வருகிறது.

மேலும் கடந்த 5 ஆண்டுகளில் அம்மா திட்ட முகாம்கள் மூலம் 6665 மனுக்கள் பெற்று தீர்வு காணப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் 2-வது சனிக்கிழமையன்று ஒவ்வொரு வட்டங்களிலும் ஏதேனும் ஒரு கிராமத்தில் பொது விநியோக திட்ட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் பெறப்பட்ட 4072 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பயன்கள் பொதுமக்களுக்கு சென்றடைந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தை பொறுத்தவரை 8309 டன் அரிசி நியாய விலைக்கடைகள் மூலம்

அனைத்து பச்சை நிற குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 7 முழு நேர நியாய விலைக்கடைகளும், 47 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் புதியதாக துவக்கப்பட்டன. அதில் 6 பகுதிநேர நியாய விலைக்கடைகள் முழுநேர கடைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஆகிய 5 வட்டங்களில் 2290 புதிய குடும்ப அட்டைகள் வழங்கியுள்ளோம்.

இன்றையதினம் அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களில் 950 புதிய குடும்ப அட்டைகளை முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதிய குடும்ப அட்டைகள் பெறப்பட்ட அனைவருக்குமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கி வரும் விலையில்லா 20 கிலோ அரிசி கிடைக்கும். தருமபுரி மாவட்டத்தில் இவ்வாண்டு ரமலான் நோன்பு கஞ்சிக்காக 33 பள்ளி வாசல்களுக்கு கூடுதலாக 45 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெறும் முகாம்களில் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உரிய பரிசீலனைக்குப் பின்பு 3 வாரங்களுக்குள் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. மு. பிச்சைராமன் அனைவரையும் வரவேற்று பேசினார். முடிவில் அரூர் கோட்டாட்சியர் திருமதி. கவிதா நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், அரூர் ஒன்றியக்குழுத் தலைவர் திரு. தென்னரசு, பாப்பிரெட்படிப்பட்டி ஒன்றியக்குழுத் தலைவர் திரு. முருகன், அரூர் பேரூராட்சி தலைவர் திருமதி. காவேரி, பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி தலைவர் திருமதி. கஸ்தூரி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. இரா. மகிழ்நன், வட்டாட்சியர்கள் திருமதி. விஜயா, திரு. மணி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.